மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: ஏறத்தாழ நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் பேருந்துகள் சலுகைக் கட்டணத்திலே ஓடிக் கொண்டிருக்கின்றன. மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே அவர்களுக்குத் தனியாக சலுகை அளிக்க வேண்டிய தேவையில்லை என்று கருதுகிறேன்.

லாரிகளுக்கு வாடகை நிர்ணயிக்கும் திட்டம்.

*வினா எண் 750—திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமனியன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள லாரிகளுக்கு வாடகையை நிர்ணயம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இல்லை. எனினும் தற்போது நடைமுறையில் உள்ள லாரி வாடகையைப் பற்றி ஆராய ஒரு குழு அமைக்கவேண்டும் என மதுரை மாவட்டம் தேனியிலுள்ள வாணிபக் கழகம் கோரிக்கை விடுத்துள்ளது. இக்கோரிக்கை பரிசிலனையில் உள்ளது.

(முற்பகல் 10.10)

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, லாரி உரிமையாளர்களிடமிருந்து கோரிக்கை வந்திருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உண்மையில் நடைமுறையில் லாரி உரிமையாளர்கள் முறையான கட்டணங்களை வாங்குவதில்லை. அவர்களுடைய நோக்கத்திற்கு வாங்குவதாகத் தான் இருந்து வருகிறது. ஆகவே குறிப்பிட்ட கட்டணத்தை மாநிலம் முழுமைக்கும் நிர்ணயம் செய்ய அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, லாரி உரிமையாளாகளிடமிருந்து கோரிக்கை வரவில்லை. வாணிப கழகத்திலே இருந்து கோரிக்கை வந்ததாகத்தான் சொன்னேன். எந்த பகுதியிலே தவறு நடக்கிறது எனபதை ஆராயாமல் இதற்கு தனியாக வாடகை எவ்வளவு என்றுநிர்ணயிக்க முடியுமா என்பதை யோசிப்போம். நடைமுறையிலே பார்க்கிறபோது அது சாத்தியப் படாது என்ற கருத்து இருக்கிறது. ஆகவே பரிசீலித்து முடியுமானால் அதைச் செய்வதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது.

திரு. வே. இரா. ஜெயராமன்: தலைவர் அவர்களே, ஊருக்கு ஊர் லாரி கட்டணங்களில் மாறுபாடுகள் இருக்கிறதால், லாரி சொந்தக்காரர்களைக் கொண்டு, அங்கே இருக்கிற கமிஷன் கடைக்காரர்களைக் கொண்டு, விவசாயிகளைக் கொண்டு ஒரு கமிட்டியை ஏற்படுத்தி வாடகையை நிர்ணயிப்பதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன.

1982 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அரசாங்கம் முதலில் ஆய்ந்து இதைச் செய்ய முடியுமா, எப்படிச் செய்வது என்று வழிவகைகளை செய்த பிறகு அங்கே இருக்கிற பிரதிநிதிகளை எல்லாம் அழைப்பது பொருத்தமாக இருக்கும். ஆரம்பத்திலேயே போட்டு விட்டால் இதிலே முடிவு ஏற்படாது என்று கருதுகிறேன்.

உடல் ஊனமுற்றோருக்கு அரசுப் பணிகளில் ஒதுக்கீடு செய்யும் திட்டம்.

*வினா எண் 751—திரு. கு. பா. பழனியப்பன்: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உடல் ஊனமுற்றோருக்கு அரசுப்பணிகளில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் ஒதுக்கிட இந்த உடல் ஊனமுற்றோர் ஆண்டில் அரசு ஆணைப் பிறப்பிக்குமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: அரசுப் பொதுப் பணிகளிலும் கல்வி நிலையங்களிலும் எல்லாவிதமான நிர்வாகங்களிலும் (அரசு உள்ளாட்சி மற்றும் நிதியுதவி பெறும் நிர்வாகங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களையும் சேர்த்து தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பிற்பட்டோர்க்கு எங்கெங்கு ஒதுக்கீடு விதிமுறை கடைபிடிக்கப்படுகிறதோ அங்கெல்லாம்) எழும் காலியிடங்கள்/இடங்களில் 3 விழுக்காடுகளை உடல் ஊனமுற்றோர்க்கு ஒதுக்கீடு செய்யும்படி சமூகநல அரசாணை பல்வகை எண். 602, நாள் 14-8-1981 மூலம் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. கு. பா. பழனியப்பன்: தலைவர் அவர்களே, அந்த அரசாணையுடைய அடிப்படையிலே கண்ணற்றோர், காது கேளாதவர்களுக்குச் சென்ற ஒரு ஆண்டில் கொடுக்கப்பட்ட வேலைகள் எத்தனை என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, சென்ற ஆண்டுதான் மூன்று விழுக்காடு என்று ஒதுக்கீடு செய்துள்ளது. படிப்படியாக இதைச் செய்து கொண்டு வருகிறார்கள்.

திரு. கு. பா. பழனியப்பன்: தலைவர் அவர்களே, இந்த உடல் ஊனமுற்றவர்களில் முழுமையாக கண் தெரியாதவர்கள், காது முழுமையாக கேளாதவர்கள் அல்லது கை முடமானவர்கள், கால் நொண்டியாக உள்ளவர்கள் என்று இப்படி பல்வேறு உடல் ஊனமுற்றவர்கள் இருக்கிற காரணத்தால் இதிலே முழுமையாக கண் தெரியாதவர்களுக்கு அதிகப்படியான ஒதுக்கீடு தருவதற்கு அரசு முன் வருமா? அதேபோல கண் தெரியாதவர்களுக்கு மட்டும் திரம் ஒரு தொழிற்பேட்டை அமைத்து அவர்கள் வாழ வழிவகை செய்ய அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS